ருவேதத்தினுடைய நன்மைபெற்ற சொலமேலையுந் திருவிளையாடல்செய்தருளாநின்றஸ்ரீமந்நாராயணா

மெலியாமையுந் திருஞானமு மிகுபோகமுந்திட
தேகமும், சலியாமையும்பகைநாசமுந் தனதாரியுத
தகுசீலமும், கலியாணமும்பெறநீதரக் கடனேபியா
ற்பினு மன்னைநான், நலியாமலேயருள் கூறுவாய்
நாராயணா நாராயணா,

(இ-ள்) மெலிதலில்லாமையும் அழகியஞானமும் மிகுந்தபோகமும் வலியதேகமும் சலியாமையும் பகைநாசமுந் திரவியராசியும் யோக்கியமான ஆசாரமுங்கலியாணம் இவையெல்லாந் தேவரீரிடத்தில் பெறும்படியான கடனாளியானதால் இனிமேல் நான்வருந்தாமல் பூரணமானகிருபை செய்தருள வேண்டும் ஸ்ரீமந்நாராயணா-எ-று. (௪௧)

சமத்தேதுநல் லறமேதருந் தமையேதுநந் தன
மேதும்பிக், கமைத்தேதுமே லடைவேதுகா ரண
மேதுபூரணமேதுசங், கமத்தேதுநாதமே நுசொ
ல் கமையேதுசொல் கதியாவுநீ, நமக்கேதுவா ர
ணவாசனே நாராயணா நாராயணா.

(இ-ள்) சாமர்த்தியங்கள் தானேது நல்லகருமங்கள்தானேது அருமையானதபசுகள்தானேது அரியதவங்கள்தானேது மிகுந்தஅனுமைப்புகள்தானேது மேலாகிய அடைவுகள்தானேது காரணங்கள்தானேது பூரணங்கள்தானேது கூட்டங்கள்தானேது ஆ[illegible]ங்கள் தானேது சொல்லியபெருமைகள்தானேது சொல்லாநின்ற மோட்சங்கள்தானேது இவைகள்யாவும் தேவரீருடையகிருபையேயன்றிவேறில்லை ஆதலால்உமது திருவடிகளுக்கே நமஸ்காரஞ்செய்துநின்றேன் துவாரகாவாசனாகிய ஸ்ரீமந்நாராயணா-எ-று. (௪௨)

பித்தங்கயஞ் சொரிகேமல்கம் பிதமீளைகா மாலை
பாண்டுவென், மத்தஞ்சுரஞ்சளிகண்ணிகால் வலிசூலை
விக்குதல்கக்குவா, யுர்த்தம்பணந் தலைநோவுபற்றுவா
நோயெலாந்தொடராமலாள், நத்தின்முகற் கொரு
காலனே நாராயணா நாராயணா.

